1982 மார்ச் 18]

பின்னர் பேரவை இரவு 8-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(10) பேரவைமுன்வைக்கப் பெற்ற ஏடுகள்
அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

112. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976—77, 1977—78—ம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

113. கோரிக்கை எண். 37, 38 மற்றும் 51—பொதுப் பணித்துறை கட்டிடங்கள், பொதுப்பணிகள், பணியாளர்கள் மற்றும் கருவிகள் இயந்திரத் தளவாடங்கள், பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மீதான மூலதனக்கணக்கு ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1982—83 (தமிழ், ஆங்கிலம்)

114. 1981—82 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை (கட்டிடப் பிரிவு)-யின் பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

115. 1982—83 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

116. 1982—83 ஆம் ஆண்டின் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

117. 1981—82 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக்கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

118. கோரிக்கை எண். 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

119. கோரிக்கை எண். 1, 11, 41 மற்றும் 46-நில வருவாய், மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் நிகழுங் கால நிவாரணப்பணி, இழப்பீட்டுத் தொகை மற்றும் ஒப்படை ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).